## R 5309 (page 275)

# கிருபையும், சத்தியமும் கிறிஸ்தவ குணலட்சணத்தின் மூலக்கூறுகள்

# MERCY AND TRUTH COMPONENT ELEMENTS OF CHRISTIAN CHARACTER

"கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்." "நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?" - (நீதிமொழிகள் 3:3; மீகா 6:8)

கிருபையும் சத்தியமும் நீதியின் மாபெரும் கொள்கைகள். சத்தியமும் நீதியும் எந்த பொருளுடையவைகள் என்று நாம் கூறலாம். சரியாக இருப்பது உண்மையாயிருக்கிறது. உண்மையாக இருப்பது அதாவது நிலையாக, உண்மையுள்ளதாக, உறுதியானதாக, நேர்மையானதாக இருப்பது வழக்கமாக சரியாக இருக்கிறது. நாம் நீதியை கழுத்திலே பூண்டு கொள்ள வேண்டும் என்று பதிவு கூறவில்லை. நீதி என்பது ஒரு குணம். நமது மனதிலும் இருதயத்திலும் தெய்வீக கொள்கையாக வைத்துக்கொள்வதைத் தவிர அதை மிக அதிகமாக உயர்த்த நாம் அனுமதிக்கப்படவில்லை. நீதிமான் இல்லை, ஒருவனாகிலும் இல்லை, யாரும் பூரணரில்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நீதி விஷயத்தில் பரலோக பிதாவுக்கு சமமாக நாம் இருக்க முடியாது.

## கிருபைக்கும் சத்தியத்துக்கும் பிரதானமான இடத்தைக் கொடுங்கள்

நாம் பிதாவானவருக்கு ஏற்புடையவர்களாக இருப்போமானால், அது நீதியினால் மட்டுமே ஆகும். நீதி நம்மிடம் இல்லையென்றால், அது கிறிஸ்துவிடமிருந்து பெறப்பட வேண்டும். ஏனெனில் பூரணமில்லாத எதையும் தேவன் ஏற்றுக்கொள்ளுவதில்லை. நமக்குள் அபூரணம் இருந்தாலும் நமது சொந்த நடத்தையில் நம்மால் முடிந்தவரை நீதியின் திட்ட நிலைக்கு வரவேண்டும். ஆனால் மனுக்குலத்திலிருந்து சரியான முழு நீதிக்கு நம்மால் வர முடியாது. அவர்களுக்கு நன்மை செய்ய யாருமே இல்லாததால், நாம் அவர்களுடன் தயையுள்ளவர்களாக இருக்க வேண்டியது நமது கடமை. இப்படியாக இரக்கமாக இருக்கக்கூடிய தேவனுடைய குணலட்சணத்தை அடைய பிரயத்தனம் செய்ய வேண்டும். நீதி மற்றும் கிருபை ஆகிய இரு குணங்களையும் தமது செயல் தொடர்புகளில் அவர் தனித்தனியாக வைத்திருக்கும் போது, நாம் அதுபோல செய்ய முடியாது.

ஒருவர் சத்தியம் மற்றும் நீதியை தனது மனதிற்கு முன்னே வைப்பதற்கு, அவர் நேர்மையானவராக இருக்க வேண்டும். அவர்களில் நற்குணம், சத்தியம், பரிசுத்தம் என்பவை அவரது கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனால் இந்த கொள்கைகளை தனது கட்டுப்பாட்டில் மாத்திரம் வைத்திருக்கும் நபர் கிருபை (இரக்கம்) என்கிற குணத்தை மேன்மேலும் வளர்ச்சி செய்ய வேண்டும். இவைகளை நாம் கழுத்திலே பூண்டு கொள்ள வேண்டும். இதன் கருத்து ஒரு கழுத்துமாலை (நெக்லெஸ்) அல்லது நகை ஆகும். ஒரு மனிதன் அவனது கழுத்தில் கழுத்து மாலையை போட்டுக் கொள்ளுவது போல, ஒரு ஆபரணத்தை போட்டு காண்பிப்பது போல, இந்த குணலட்சண பண்புகள் ஆபரணத்தைப்

போல இருக்கின்றன. அதற்கு பிரதானமான இடத்தை கொடுங்கள். ஏனெனில் உங்களை சிறந்தவர்களாக உதவும். உங்களை இன்னும் அதிகமாக தேவனுக்கு ஏற்புடையவர்களாக உதவும்.

ஒரு ஆபரணத்தை காட்டுவதற்கு கழுத்தே சரியான இடமாக இருக்கிறது. ஆபரணம் என்பது விசேஷமாக கவனத்தை கவருகிறதாகவும் அலங்காரமானதாகவும் இருக்கிறது. ஆகையால் இந்த உயர்ந்த குணங்களை, நமது வாழ்க்கையின் சகல காரியங்களிலும் வெளிப்படுத்தக் கூடிய இடத்தில் நாம் கட்டிக்கொள்ள வேண்டும். நாம் வாங்கினாலும் விற்றாலும் என்ன செய்தாலும் இந்த ஆபரணங்களை நாம் அணிந்து கொள்ள வேண்டும். மனிதனுடைய அல்லது ஸ்தீரியினுடைய குணலட்சணம் என்ன என்பதை சரியாக வெளியே அல்லது மிகவும் முன்பக்கம் காண்பிக்கும். மற்றவர்களை நாம் சந்திக்கும் பொழுது அவைகள் காணப்பட வேண்டும். நம்மைக் குறித்து இழிவானதோ, கஞ்சத்தனமோ, மட்டமானதோ இருக்கக்கூடாது.

## கிருபையையும் சத்தியத்தையும் இருதயத்தில் மறுபடியும் எழுதுதல்

இதைக் காட்டிலும் கிருபையையும் சத்தியத்தையும் நாம் இதயத்திலே எழுதிக்கொள்ள வேண்டும். ஆதியிலே தேவன் ஆதாமின் இருதயத்தில் தெய்வீக சட்டத்தை எழுதினார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். சத்தியமும் கிருபையும் தெய்வீக இருதயத்தில் தெய்வீக குணங்கள் என்பதை நாம் அறிவோம். தேவன் கிருபையுள்ளவராகவும், அன்புள்ளவராகவும், தயவுள்ளவராகவும் இருக்கிறார். தேவன் இந்த குணலட்சண பண்புடையவராயிருப்பதால், அவர் மனிதனை தமது ரூபத்தின்படி தமது சாயலின்படியும் படைத்த பொழுது, இந்த தமது குணலட்சண பண்புகளுடன் தான் படைத்தார். மனிதன் அநீதியுள்ளவனாக, உண்மையில்லாதவனாக படைக்கப்படவில்லை.

ஆனால் மனிதன் தனது ஆதி பரிபூரணத்திலிருந்து விழுந்தான். நூற்றாண்டு காலமாக அபூரண மனம் மற்றும் சரீரத்துடன் மற்றவைகளுக்கு தாழ்வு உண்டாகும்படி தங்கள் சுய திருப்தியில் அக்கறை கொண்டதால் கிருபையும் சத்தியமும் தொடர்ச்சியாக தண்ணீர் சொட்டுவது போல, கல்லில் பொறிக்கப்பட்டவைகள் தேய்மானத்தினால் அழிவது போல, இருதயத்திலிருந்து மிகவும் அழிந்து போயிருக்கின்றன. குணலட்சணங்களை ஒருவர் குறிப்பிட்ட காலத்திற்குள் உணர்ந்து புரிந்து கொள்வது அரிதானது. ஆகையால் நாம் மனுக்குலத்தில் சிலர், நீதி, கிருபை ஆகியவற்றில் முழு உணர்வுகளையும், பொறுமை, தயவு, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகியவற்றில் ஏறக்குறைய சகல உணர்வுகளையும் இழந்திருப்பதை நாம் காண்கிறோம். இருதயத்துக்குரியவைகளாகிய இந்த பண்புகள் அனைத்தும் ஆதியிலும் தேவனால் அங்கே வைக்கப்பட்டன. இவைகள் சிலரின் ஏறக்குறைய அழிந்து போயின, மற்றவர்களிடம் இன்னும் அதிகமாக அழிந்து போயின.

## தேவனுடைய பராமரிப்பின் நோக்கம்

புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழும், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் ஊழியத்தின் மூலமாகவும் தேவன் மனித இருதயத்தில் வைத்தும் இப்போது சுய நலத்தினால் அழிந்து போயிருக்கிற ஆதி குணலட்சணங்களை மறுபடியும் மனித இருதயத்தில் எழுத தேவன் நோக்கங்கொண்டிருக்கிறார். “இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடு யூதா குடும்பத்தோடும் உடன்படிக்கை பண்ணுவேன்..... நான் என் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து,

அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன்." (எரேமியா 31:31-33) "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்களை மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன்." (எசேக்கியல் 36:26)

தேவனுடைய பிரமாணம் சத்தியம் மற்றும் கிருபையின் பிரமாணமாக இருக்கிறது.

**R5309 : page 276**

தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் நீதியாயிருக்கிற சகலத்தையும் சத்தியம் உள்ளடக்கியிருக்கிறது. கிருபையானது குணலட்சணத்தின் சகல கருணைகளையும் உள்ளடக்குகிறது. குணலட்சணத்தில் இந்த பண்புகளை திரும்ப எழுதக்கூடிய காலம் ஆயிர வருட யுகமாக இருக்கும். தெய்வீக குணலட்சணத்தை இருதயத்தில் திரும்ப எழுதக்கூடிய இந்த வேலை உலகத்தில் சீக்கிரத்தில் ஆரம்பித்து ஆயிரம் வருட யுக முழுவதும் நடைபெறும். இது சபையில் முன்னரே ஆரம்பித்து விட்டது. நாம் இந்த பண்புகளை நமது இருதயத்தில் எழுதுகிறோம். கிறிஸ்துவின் பள்ளியில் நுழைவது கட்டாயமானது அல்ல, சுய விருப்பத்துடன் செய்வது. அடுத்த யுகத்தில் மனுக்குலமானது இந்த பண்புகளை தங்களது இருதயத்தில் மத்தியஸ்தரின் உதவியுடன் எழுத வேண்டும். மனுக்குலத்தை நீதிக்குள் கொண்டு வருவதற்கு அடிகள் இருக்கும். அவர்கள் வேண்டுமென்றே நீதியின் பிரமாணத்துக்கு கீழ்ப்படிய மறுத்தால் அவர்கள் அழிக்கப்படுவார்கள்.

ஆனால் இப்பொழுது கீழ்ப்படிதல் என்பது சுய விருப்பத்துடன் செய்வது. இந்த பாடங்கள் நமது இருதயத்தில் எழுதப்பட விரும்புகிறோம் என்று அறிவிக்கிறோம். இதை இறுதியில் அடைவதற்கு, நாம் பள்ளியில் நுழைந்து, மாபெரும் போதகரிடம் நம்மை ஒப்புக்கொடுப்போம். நமது வாழ்க்கையில் பல்வேறு பராமரிப்பின் மூலமாக இன்னும் நாம் எங்கே இந்த பண்புகளை இன்னும் நமது இருதயத்திற்குள் பொறிக்கவில்லை என்பதை அவர் காட்டுகிறார். நாம் பொறுமைக்காக ஜெபிப்பதால், இந்த குணம் நமது இருதயங்களில் உண்டாகும்படி அனுபவ பாடங்களை நமக்கு தந்து, அது மேன்மேலும் பலப்படும்படி செய்கிறார். நாம் அன்பு என்கிற குணத்திற்காக ஜெபிப்பதால், அவர் அன்பிற்கான சோதனையை அவர் நமக்கு தருகிறார். இரக்க குணத்தை அபிவிருத்தி செய்யும்படி கேட்பதால், நமது இரக்க குணத்தை அபிவிருத்தி செய்கிற அதிக எதிர்ப்பை நாம் காண்கிறோம். இப்படியாக நமது இருதயத்தில் கிருபையையும் அன்பையும் எழுதுவதற்கு அநேக சந்தர்ப்பங்களை தேவன் தருகிறார்.

அன்பையும் நீதியையும் சிநேகிக்கிற, அக்கிரமத்தையும் அநீதியையும் வெறுக்கிற இருதய நிலைமையை நாம் அடைய வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக, இப்போது இந்த பண்புகளை அபிவிருத்தி செய்யக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தை நாம் பெறுகிறோம். நமது பாடங்களை கற்றுக்கொள்ளுவதில் உண்மைத் தன்மையை நாம் நிரூபித்தால், நம்மை அவர் ஆயிரம் வருட யுகத்தில், ஆளுகை செய்ய பயன்படுத்தவும் நம்மை உலகத்தின் ஆளுனராகவும், நியாயதிபதியாகவும் போதகராகவும் ஆக்கவும் தேவன் நோக்கங்கொண்டிருக்கிறார்.

## கிறிஸ்தவ பிரமாணம் கிறிஸ்தவர்களுக்கு உதவிகரமாக இருக்கிறது

நமது தலைப்பு வசனத்தின் இரண்டாவது பகுதி, கிறிஸ்தவர்களை நோக்கி அல்ல, எபிரேயர்களை நோக்கி கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் அந்த சமயத்தில் கிறிஸ்தவர்கள்

இல்லை. அந்த வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக காணப்படாமல் ஜனங்களுக்கு புத்திமதியாக இருந்தது. கர்த்தர் அவர்களிடம் அதிகமாக எதிர்பார்த்ததாக நினைத்தார்கள். இது அப்படி இருந்ததால், பிரமாணத்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக எடுத்துக்கொள்ளாதிருந்தார்கள். இந்த காரியங்களை குறித்து கர்த்தர் ஒரு குறிப்பிட்ட அறிக்கையை கொடுத்திருப்பதாக தெரிகிறது. உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது மூன்று காரியங்களே: நியாயம் செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தை உன்னிடத்தில் கேட்கிறார். இது பிரமாணத்தின் மொத்த கூட்டுத் தொகையாக இருக்கிறது.

இஸ்ரயேல் ஜனங்கள் பிரமாணத்தின் தேவைகளுக்கேற்ப முடிந்தவரை நடக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். தேவன் ஏற்ற காலத்தில் அவர்களை புதிய உடன்படிக்கைக்குள் கொண்டு வர தீர்மானித்திருந்தார். புதிய உடன்படிக்கையானது, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, அவர்களை சதையான இருதயம் உள்ளவர்களாக மாற்றும். ஆனால் அவர்கள் இந்த பிரமாணத்திற்கு இசைவாக, முடிந்தவரை நடந்து, நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடந்தால் அதற்கேற்றாற் போல் அவர்கள்

**R5310 : page 276**

ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இந்த பிரமாணம் எபிரேயர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது கற்பிக்கிற கொள்கைகள் அகில உலகத்திற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. தேவனுடன் நிற்கின்ற ஒவ்வொருவரும் நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, மனத்தாழ்மையாய் நடக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் பிரமாணத்தின் ஒவ்வொரு மற்றும் தேவனுடைய திட்ட நிலையின் கருத்தை கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கிறது. இது அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கிறது. அது பரிபூரண நிலையின் திட்ட அளவைக் அவர்களுக்கு காண்பிக்கிறது. ஆனால் ஒரு கிறிஸ்தவனுடைய திட்ட அளவு நியாயப்பிரமாணத்தின் திட்ட அளவைக் காட்டிலும் உயர்ந்ததாக செல்லுகிறது. நியாயப்பிரமாணமானது பொன்னான கற்பனையின் பெருக்கமாக மட்டுமே இருக்கிறது. அதாவது மற்றவர்கள் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயோ, அதையே நீ பிறருக்கு செய் என்பது தான். மற்றவர்கள் நியாயஞ்செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் நியாயஞ்செய்ய வேண்டும். மற்றவர்கள் உன்னிடம் இரக்கமாயிருக்க வேண்டும் என்று நீ எதிர்பார்த்தால், நீ அவர்களிடம் இரக்கமாயிருக்க வேண்டும்.

இந்த குணலட்சணங்களை நினைத்து, எது முதலாவது இருக்க வேண்டும் என்று கவனிக்கும் போது, நீதிக்கு குறைவானதை கொடுக்க நாம் நினைக்க முடியாது. அதோடு கூட சந்தர்ப்பம் சூழ்நிலை அனுமதிப்பதற்கு ஏற்ப, நாம் இரக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் நீதிக்கு குறைவானது எதையும் நினைக்கக்கூடாது எனினும் நாம் மற்றவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது, நாம் முன்னரே சொன்னது போல முழுமையான நீதியை எதிர்பார்க்க முடியாது. முழு மனுக்குலமும் அபூரணமானது என்பதை நாம் நினைவு கூர வேண்டும். தேவனுடைய கிருபையால், சராசரியைக் காட்டிலும் நாம் அதிகம் நீதியுள்ளவர்களாக, அல்லது அதிகம் இரக்கமுள்ளவர்களாக இருக்கக்கூடுமானால், அது தேவனுடைய ஆவியினாலாகும்.

## நீதியான நடத்தையில் தேவனுடைய திட்ட அளவு

நாம் கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது, நாம் அவரால்

போதிக்கப்படக்கூடிய மனநிலையில் இருக்கிறோம் என்பதையும், நாம் அவரது நற்குணத்தையும் நமது முக்கியமற்ற தன்மையை உணரக்கூடும் என்பதையும் குறிக்கிறது. மேலும் அவர் அனுப்புகிற அறிவுறுத்தல்களை பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் குறிக்கிறது. நமது இனத்தை சிருஷ்டிக்கும் போது நாம் பெற்றிருந்த அவரது சாயலை பெரும்பாலும் நாம் இழந்திருக்கிறோம். ஆகையால் நாம் தாழ்மையாகவும் எல்லா காரியங்களிலும் போதிக்கப்படக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

நமது தலைப்பு வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல, இஸ்ரயேலரிடமிருந்து அவர் எதிர்பார்த்ததையும் சபையிடமிருந்து எதிர்பார்ப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதைக் காட்டிலும் மேலானதை தேவன் சபையிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்று நாம் கூறலாம். இது எந்த ஒரு ஜீவியிடமிருந்தும் எதிர்பார்க்கக் கூடிய நீதி ஆகும். சபையின் விநோதமான நிலைமை என்னவென்றால், இது எதிர்பார்க்கக் கூடியது அல்ல. ஆனால் சலுகை ஆகும். ஆனால் சபையில் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் இன்னும் உயர்ந்த கொள்கைகளை இயக்குகிறதை நாம் காண்கிறோம். அதாவது பலியின் ஜீவியம். இயேசு, பிதாவையும் நீதியையும் சிநேகித்து, தமது பூமிக்குரிய விருப்பங்களையும், பூமிக்குரிய அபிலாஷைகளையும் உரிமைகளையும் பலியிட்டு, நமக்கு ஒரு முன் மாதிரியை வைத்தது போல, நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும். அவர் நீதியைக் காட்டிலும் அதிகமாக செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் அவர் அதிகமாக செய்ய அனுமதிக்கப்பட்டார். அதே போல சபையிடமும் இருக்கிறது. நீதியைக் காட்டிலும் நாம் அதிகமாக செய்ய எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் நாம் அதிகமாக செய்ய அனுமதிக்கப்படுகிறோம். நாம் நமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, முடிவு பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால், சீக்கிரத்தில் மகிமையான ராஜ்யத்தை, நாம் ஜெபித்துக்கொண்டிருக்கிற ராஜ்யத்தை கொடுக்க தேவன் விரும்புகிறவர்களில் ஒருவராக நாம் எண்ணப்படுவோம்.

## அன்பின் பல்வேறு தரங்கள்

நாம் இந்த பலியின் நிலைமைக்கு நாமாக வந்த பிறகு, நாம் எடுத்திருந்த இந்த பொருத்தனையில் நாம் அடிமைப்பட்டிருந்து, நமது பொருத்தனைகளோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். நமது அழைப்புக்கு இசைவாக நமது ஜீவனை கொடுப்போம் என்று பொருத்தனை பண்ணினோம். “பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்.” இன்னும் கூட தேவன் நம்மிடமிருந்து நீதிக்கு மேலாக கேட்கவில்லை. ஆனால் நாம் நமது உடன்படிக்கைக்கு எந்த அளவுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்பதை காண அவர் காத்துக்கொண்டும் கவனித்துக் கொண்டும் இருக்கிறார். நாம் இயேசுவுக்கு உடன் பலி செலுத்துகிறவர்களாக இருந்தால் நாம் அவருக்கு உடன் சுதந்தரருமாயிருப்போம். நமது அர்ப்பணத்தில் அவரது நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்டோம். நாம் பின்வாங்கி போய் திரும்பப் பெறும் சலுகையை பெற முடியுமா? முடியாது. நாம் அதை முற்றிலுமாக அர்ப்பணித்து விட்டோம்! பலியின் உடன்படிக்கையை நிறைவேற்றுவதே நாம் செய்ய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. உடன்படிக்கைக்கு விரோதமாக சென்றால் இரண்டாம் மரணம், நித்திய அழிவே கிடைக்கும்.

அன்பில் பல்வேறு தரங்கள் இருக்கின்றன. நாம் நம்மை அர்ப்பணம் செய்த தரம் பலியின் அன்பு. இது ஒரு சகோதரனிடம், அயலானிடம், சத்துருவிடம் நீதியாக இருப்பதற்கும் அப்பாற்பட்டது. இது தேவனுடைய அன்பு, இது அனைவரையும் இணைத்துக் கொள்ளுகிற அன்பு, அனைவரிடமும் விரிவடைந்த அன்பு.

நமது தலைப்பு வசனத்தில் சொல்லப்பட்ட தேவைகள் சரியானதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கின்றன. எதிர்காலத்தில் உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக தேவன் போதித்துக் கொண்டிருக்கிறவர்களிடமிருந்து இதற்கு குறைவாக தேவன் எதிர்பார்க்கமாட்டார் என்பது தெளிவாக இருக்கிறது. தீர்க்கதரிசி மூலமாக குறிப்பிடப்பட்ட இந்த குணங்கள், அன்பு என்கிற ஒரே வார்த்தையில் அறிந்து கொள்ளப்படுகிறது. நமது அண்டை வீட்டாரை, நமது சகோதரரை, நமது குடம்பத்தாரை,

**R5310 : page 277**

நம்மை நீதியுடன் நடத்த வேண்டும் என்று அன்பானது எதிர்பார்க்கிறது. மேலும் நாம், மற்றவர்களது உரிமைகளை அதாவது சரீர சம்பந்தமான உரிமைகள், நீதி சம்பந்தமான உரிமைகள், அறிவு சம்பந்தமான உரிமைகள் மற்றும் அவர்களது சுதந்தரங்களை உணர்ந்து கொள்ளுவதை வளர்த்துக் கொள்ள நாட வேண்டும்.இதை உணர்ந்து கொண்டு அதை மறுக்கவோ, சுருக்கவோ நாடக்கூடாது. ஆனால் இன்னும் அன்பானது, சகோதரர்களுக்காக ஜீவனை சந்தோஷமாகக் கொடுக்கக்கூடிய பலியின் ஆவியைப் பெற நம்மை வழி நடத்துகிறது.

-------------------